**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.13/2023</u>**

தேதி: 30.01.2026

பெயர் : பிரதீப் (வா.சா.3) த/பெ: குலோத்துங்கன்

**<u>5ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து செங்காட்டுப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து ரெங்கசாமிரெட்டியாருக்கு இனாம்சாசனம் மூலம் கிடைத்த சொத்தாகும். ரெங்கசாமி ரெட்டியாரின் மூத்த மகள் மணிமேகலை இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் 4, 5 வாதிகளும் மற்றும் 5ம் பிரதிவாதியும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 5ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்களை நான் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். ரெங்கசாமி ரெட்டியார் மணிமேகலைக்கு சீர்வரிசை செய்தாரா என்றால் இல்லை. மணிமேகலை தாவா சொத்தில் தன்னுடைய பாக உரிமையை விடுதலை செய்து ஏதேனும் பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து வருவாய் ஆவணம் மற்றும் மின்இணைப்பு ரெங்கசாமி இறக்கும் வரை அவர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.26 கிரைய ஆவணத்தில் ஆண்வாரிசுகள் மட்டும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பெண் வாரிசுகள் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.27 கிரைய ஆவணத்தில் நானும் என் தாயாரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு அவரது இறந்துபோன தாயாரான மணிமேகலையின் பாகத்தில் கூட்டு பங்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். இந்து வாரிசுரிமை சட்டப்படி 4, 5 வாதிகளுடன் சேர்ந்து 5ம் பிரதிவாதிக்கு பங்குரிமை உள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.